# கடையேழு வள்ளல்கள்

**முனைவர் பா. சுடரொளி**
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்

**மலர்:** 3
**இதழ்:** 3
**தொகுதி:** II
**மாதம்:** ஜனவரி
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

## முன்னுரை

சங்க காலத்தில் மற்றவர்களுக்கு கொடுத்து உதவும் பண்பும், மனப்பான்மையும் உற்றவர்களாக மக்கள் வாழ்ந்தனர். அன்றைய காலத்தில் பிறருக்கு வாரி வழங்குபவர்கள் வள்ளல் எனப்பட்டனர். உதவி என்று வருபவர்களுக்கு வாரி வழங்கிய கடையேழு வள்ளல்களைப் பற்றி இக்கட்டுரையின் வாயிலாக காண்போம்.

## சிறுபாணாற்றுப்படை

சிறுபாணாற்றுப்படை 269 அடிகள் கொண்டது, ஆசிரியப்பாவால் அமைந்தது. பாட்டுடைத் தலைவன் ஒய்மானாட்டு நல்லியக்கோடன் ஆவான். பரிசுப்பெற்ற பாணன் பரிசு பெற விரும்பிய பாணரிடம் ஒய்மானாட்டு நல்லியக் கோடானிடத்தே ஆற்றுப்படுத்தியதாகப் பாடப்பட்டது. இதனை இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடியுள்ளார். பாணர் என்பவர் யாழ்ப் பாணர், இசைப்பாணர், மண்டைப்பாணர் என்றப் பல பிரிவினர் உள்ளனர். இப்பாடலில் கூறப்படுபவர் யாழ்ப் பாணன் ஆவான். யாழ்ப் பாணருள் சிறுபாணர், பெரும்பாணர் என்னும் இரு பிரிவுகள் உண்டு.

**"இன்குரல் சீறியாழ் இடவயின் தழீஇ"[2] (சிறு. 35)**

என வரும் சிறுபாணாற்றுப்படை அடியும்,

**"இடனுடைப் பேரியாழ் முறையுறிக் கழிப்பி"[2] (பெரும். 463)**

என வரும் பெரும்பாணாற்றுப்படை அடியும் சுட்டுகின்றன.

பாணர்கள் வைத்திருந்த யாழின் வடிவமைப்பைக் கொண்டு சிறுபாணர், பெரும்பாணர் என்று பிரிக்கின்றனர்.

நல்லியக் கோடனின் கொடைச் சிறப்பு உலகம் வியந்துகூறும் கடையேழு வள்ளல்களின் வள்ளத்தன்மைக்கு நிகரான முயற்சி உடையவன். அவனுடைய கொடைப்பண்பு, மற்றவர்களுக்கு உதவும் தன்மை, பாணர்களை உபசரிக்கும் முறை போன்ற அனைத்திலும் சிறந்து விளங்கினான் என்பதனைச் சிறுபாணாற்றுப்படை கூறுகிறது.

## கலைஞர்கள் - வள்ளல்கள் உறவுநிலை

கலைஞர்கள் குறிப்பிட்ட ஓர் இடத்தில் நிலைபெற்றிருக்காமல் பல இடங்களுக்குச் செல்லும் இயல்பினராக இருந்தனர். வள்ளல்கள் கலைஞர்களைக் கண்டவுடன் அகமும், முகமும் மலர வரவேற்றனர். கலைஞர்கள் வறுமைப்பட்டவர்களாக இருந்தாலும் வள்ளல்கள் அவர்களை மதிப்புடன் நடத்தினர். பரிசில் வேண்டிவரும் கலைஞர்களுக்கு பரிசில் மட்டம் அளிக்காமல் தம்முடைய அன்பையும் சேர்த்து வழங்கினர்.

கலைஞர்கள் குறிப்பிட்ட வள்ளல்களைவிட்டு நீங்காமல் அவர்களைச் சார்ந்தே இருந்தனர். அத்தகைய வள்ளல்கள் இறக்கும்போது கலைஞர்கள்

அளவற்ற வேதனை அடைந்த தெய்வமாகப் போற்றும் யாழைக்கூட வீசி எறிந்தனர் என்பதிலிருந்து கலைஞர்களுக்கும் வள்ளல்களுக்கும் இருந்த நெருக்கமான உறவுநிலை புலப்படுகிறது.

கலைஞர்கள் எந்தநேரத்திலும் மன்னனைக் கானும் உரிமை பெற்றிருந்தனர். அதனை,

**"கழல் தொடி ஆஅய் மழை தவழ் பொதியில்**
**ஆடுமகள் குறுகின் அல்லது**
**பீடு கெழு மன்னர் குறுகலோ அரிதே" (புறம். பா. 128)**

என்ற பாடல் வரிகள்மூலம் அறியமுடிகிறது.

**பேகன்**

வள்ளல்களின் வரிசையில் முதலில் விளங்குபவன் பேகன். இவன் குறுநில மன்னன். ஆவியர் குடியில் தோன்றியவன். பருவ மழை தவறாது பெய்யும் வளமிக்க மலை நாட்டை உடையவன். அவன் மழைப் பருவத்தில் மயில் காட்டில் அகவியதைக் கேட்டான். குளிரால் நடுங்கி மயில் அகவியது என்று எண்ணினான். அதன்மீது இரக்கம்கொண்டான். மயில் மீது தன் போர்வையைப் போர்த்தினான். இதனை,

**"...................................... அதா அன்று**
**வானம் வாய்ந்த வளமலைக் கலாஅன்**
**கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய**
**அருந்நிறல் அணங்கின் ஆவியர் பெருமகன்**
**பெருங்கல் நாடான் பேகனும்" (சிறுபாண். அடி. 84-87)**

என்னும் பாடலடிகள் மூலம் அறியலாம். இத்தகு கொடையால் இவன் அழியாப் புகழ் பெற்றான்.

பேகனின் கொடை நலத்தை வியந்து, மழை எப்படி அனைத்து இடத்திலும் வேறுபாடு இன்றி பொழியுமோ அவ்வாறு பேகன் வலியவர், மெலியவர், வேண்டியவர், வேண்டாதவர், முதியவர் என எவ்வித பாகுபாடு பார்க்காமல் அனைவருக்கும் வழங்கும் கொடைச் சிறப்பு உடையவர் என்பதையும் பேகன் நாட்டின் சிறப்பையும், அவன் கொடைத் தன்மையையும் புறநானூறு பாடல்கள் சுட்டுகின்றன.

**"கடாஅ யானைக் கழற் காற் பேகன்**
**கொடைமடம் படுதல் அல்லது" (புறம். பா. 142)**
**"புனத் தினை அயிலும் நாட! சினப் போர்க்**
**கைவள் ஈகைக் கடுமான் பேக!" (புறம். பா. 143)**

மெல்லிய இறகுகளை உடைய மயில் குளிரால் நடுங்குவதைக் கண்டு அருள்செய்து போர்வை கொடுத்த அழியாத நற்புகழையும், மதமுடைய யானையையும், மனம் செருக்கிய குதிரையையும் உடைய பேகனே என்பதை,

**"மடத் தகைமா மயில் பனிக்கும் என்று அருளி**
**படாஅம் ஈத்த கெடாஅ நல் இசை,**
**கடாஅ யானைக் கலி மான் பேக!" (புறம். பா. 145)**
**"அருந் திறல் கடவுள் காக்கும் உயர் சிமை**
**பெருங்கல் நாடன் பேகனும்" (புறம். பா. 158)**

புறநானூற்றுப் பாடல் வரிகள் எடுத்துரைக்கின்றன.

**பாரி**

வள்ளல்களின் வரிசையில் இரண்டாவதாக விளங்குபவர் பாரி. இவன் பறம்பு மலையை ஆண்ட குறுநில மன்னன் வண்டுகள் உண்ணும்படி நல்ல பூக்கள் தேனை வழங்கும் சிறப்பு உடைய சுரபுன்னைகள் நிறைந்த வழிப்பாதை. அப்பாதையின் வழியே பாரி தன் தேர்மீது ஏறிச் சென்றான். பாதையில் சிறிய பூக்களை உடைய முல்லைக் கொடி பற்றிப் படர்வதற்கு இடம் இல்லாமல்

தவித்தது. இதைக்கண்ட பாரி தான் ஏறிவந்த தேரை அவ்விடத்தில் நிறுத்தினான். அதில் முல்லைக் கொடியைப் படரவிட்டான். இத்தகு இரக்கக் குணம் கொண்டவன் பாரி என்பதைப் பின்வரும் பாடல் வரிகள் புலப்படுத்துகின்றன.

**"...................................... சுரும்பு உண**
**நறுவீ உறைக்கும் நாக நெடுவழிச்**
**சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய**
**பிறங்கு வெள் அருவிவிழும் சாரல்**
**மறம்பின் கோமான் பாரியும்" (சிறுபாண். அடி. 87-91)**

அருவி நீரைவிட இனிய மென்மையுடைய வேள்பாரியைப் பாடி நீ சென்றால், சிவந்த அணிகலன்கள் பலவற்றைப் பரிசாகப் பெறுவாய் என்பதை,

**"நீரினும் இனிய சாயற்**
**பாரி வேள்பால் பாடினை செலினே"**

என்ற புறநானூறு பாடல் வரிகள் சுட்டுகின்றன.

**காரி**

அருள்மொழி மிக்கவன், ஒளி மிக்க அச்சம் தரும் நீண்ட வேலினை உடையவன். பெரிய கையுடையவன் காரி. ஒலிக்கும் மணிகளையும், உலகமே வியக்கும்வகையில் போரில் புகழ்மிக்க தன் குதிரையையும், தன் நாட்டின் நல்ல மொழிகளையும் இரவலர்களுக்கு உலகம் வியக்கும்படி கொடுத்தவன் காரி என்னும் மன்னன் என்பதை,

**"...................................... கறங்கு மணி**
**வால் உளைப் புரவியொடு வையகம் மருள்**
**ஈர நல் மொழி, இரவலர்க்கு ஈந்த**
**அடில் நிகழ்ந்து இமைக்கும் அஞ்சு வருநெடுவேல்**
**சூழல் தொடித் தடக்கை காரியும்" (சிறுபாணா. அ. 91-95)**

என்னும் பாடல் வரிகள் சுட்டுகின்றன.

காரி என்னும் குதிரையைச் செலுத்தி பெரும் போரை வென்றவன். மழைபோல கொடைத்தன்மைக்கொண்டவன். மறப்போரினை உடையவன் காரி என்று அவனடைய கொடைச் சிறப்பு என்பதனை,

**"காரி ஊர்ந்து பேர் அமர்க் கடந்த**
**மாரி ஈகை, மறப்போர் மலையனும்" (புறம். பா. 158)**

புறநானூறு பாடல் வழியாக அறியலாம்.

வலிமை பொருந்திய தேரினை உடையவன் காரி என்பதை,

**"நெடுந் தேர்க் காரி காடுங்கால் முன்துறை" (அகம். பா. 35)**

பாடல் வரிகள் மூலம் காட்டுகின்றன.

**ஆய்**

இவன் பொதிய மலையினிடத்து உள்ள ஆய் குடியைத் தலைநகராகக்கொண்டு ஆட்சி செய்தவன். அதனால் ஆய் என்னும் பெயர் ஏற்பட்டதாகச் சிலர் கூறுவர். இவன் வலிமையான தோள்களை உடையவன். இனிய மொழிகளைப் பிறரிடத்துப் பேசி மகிழ்பவன். அரிய சிறந்த மணிகளையும், ஆடைகளையும் இவன் பெற்றிருந்தான். இறைவன்மீது கொண்ட பேரன்பால் அவற்றை இறைவனுக்குக் கொடுத்தான் என்பதை,

**"............................................ நிழல் திகழ்**
**நில நாகம் நல்கிய கலிங்கம்**
**ஆல் அமர் செல்வதற்கு அமர்ந்தனன் கொடுத்த**
**சாவம் தாங்கிய சாந்து புலவர் திணி தோள்**
**ஆர்வ நன் மொழி ஆயும்" (சிறுபா. அடி. 95-99)**

ஏன்ற வரிகள் மூலம் சிறுபாணாற்றுப்படை சுட்டுகிறது.

கழலுமாறு அணிந்துள்ள தோள் வளையினை உடையவன் ஆய் என்ற வள்ளல் ஆவான். அவனுடைய மலை மேகங்கள் தவழும் பொதியில் மலையாகும் என்பதை,

**"கழல்தொடி ஆஅய் மழை தவழ் பொதியில்" (குறுந். பா. 84)**

என குறந்தொகை காட்டுகிறது.

**அதியமான்**

இம்மன்னன் அதியர் என்னும் குடியில் பிறந்தவன் அதியன், அதிகமான், அதியமான் என்னும் பெயர்கள் இவனுக்கு உண்டு. இம்மன்னன் ஔவையாரிடம் நட்பு கொண்டிருந்தான். அதியமான் குதிரை மலை அரசன் ஆவான்.

அதியமான் ஒருமுறை வேட்டைக்குச் சென்றான். அங்குள்ள மலைச்சாரலில் மருத்துவத்தன்மை உடைய நெல்லி மரத்தில் ஒரே ஒரு பழம் பழுத்துத் தொங்கியது. அதை அதியமான் பறித்து வந்தான். அக்கனியை உண்போர் நீண்ட நாள் உயிர் வாழ்வர் என்பதை அறிந்துகொண்டான். அத்தகு சிறப்புகொண்ட நெல்லி கனியைத் தான் உண்ணாமல் ஔவையாருக்கு வழங்கினான்.

**"............................................ மால் வரைக்**
**கமழ் பூஞ் சாரல் கவினிய நெல்லி**
**அமிழ்து விளை தீம் கனி ஔவைக்கு ஈந்த**
**உரவுச் சினம் கனலும் ஒளிதிகழ் நெடுவேல்**
**அரசக் கடல் தானை அதிகனும்" (சிறுபாண். 99-103)**

அழகிய மலையையும், கூர்மையான வேலினையும், வில்வமாலையையும், வளைந்த பூணினையும் உடைய அழகு மிகுந்தவன் அதியமான் என்பதனை,

**"ஊராது ஏந்திய குதிரை கூர்வேல்**
**கூவிளங் கண்ணி, கொடும் பூண் எழினியும்" (புறம். பா. 158)**

என்ற புறநானூறு பாடல் நூலின் வாயிலாக சுட்டுகிறது.

**நள்ளி**

வளம் செறிந்த கண்டீர நாட்டைச் சேர்ந்தவன் நள்ளி. உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவது உள்ளத்தில் கருனை இல்லாமல் பிறர்க்கு ஈதலும் பயன்தராது என்ற கொள்கை உடையவன். தன்னிடம் வந்த இரவலர்கள் மனம் மகிழ்கின்ற வகையில் பரிசுப்பொருள்களை அள்ளிக் கொடுப்பவன் இவன். தன்னிடம் வந்தவர்கள் மீண்டும் வறுமையில் வாடாதவாறும் வேறொருவரிடம் சென்று இரவாதவாறும் நிரம்பக் கொடுக்கும் இயல்பு உடையவன் நள்ளி என்பதை,

**"...................................... கரவாது**
**நட்டோர் உவப்ப, நடைப் பரிகாரம்**
**முட்டாது கொடுத்த முனை விளங்குதடக்கை**
**துளி மழை பொழியும் வளி துஞ்சு நெடுங்கோட்டு**
**நளி மலை நாடன் நள்ளியும்" (சிறுபாண். 103-107)**

சிறுபாணாற்றுப்படை அடிகள் சுட்டுகின்றன.

வலிமையுடைய தேரினை உடையவன் நள்ளி என்னும் வள்ளல் என்று,

**“திண்தேர் நள்ளி கானத்து அண்டர்” (குறுந். பா. 210)**
என குறுந்தொகை விளக்குகிறது.

தன்னிடம் இல்லை என்று வருவரின் வறுமையைக் கருதி அவர்களுக்கு வாரி வழங்கும் கொடைத் தன்மையையும் பகைவரைத் துரத்திய வெற்றியை உடையவன் நள்ளி என்னும் வள்ளல் என்பதை,

**“தள்ளாது ஈயும் தகைசால் வண்மை**
**கொள்ளார் ஓட்டிய, நள்ளியும்” (புறம். பா. 158)**
என்று புறநானூறு எடுத்துரைக்கிறது.

**ஓரி**

சிறிய மலைகளை உடைய கொல்லி மலைக்குத் தலைவன் ஓரி. இவன் ஓரி என்னும் புகழ்மிக்க குதிரையை உடையவன், காரி என்னும் புகழ்மிக்க குதிரையை உடைய காரியுடன் போரிட்டுப் பல முறை வென்றான். இறுதியில் சேரனின் துணைபெற்று போரிட்ட காரி இவனைக் கொன்றான்.

அழகிய கொடிகளில் மனம் கமழும் பூக்கள் நிறைந்த புன்னை மரங்களையும், அழகிய மலைகளை உடைய நல்ல நாட்டை கூத்தாடுவார்க்குக் கொடுத்தவன் ஓரி என்பதை,

**“........................... நளி சினை**
**நறும் போது கஞலிய நாகு முதிர் நாகத்து**
**குறும் பொறை நல் நாடு கோடியர்க்கு ஈந்த**
**காரிக் குதிரைக் காரியொடு மலைந்த**
**ஓரிக் குதிரை ஓரியும்” (சிறுபாண். 107-111)**
இம்மன்னனின் வள்ளல்தன்மையைச் சிறுபாணாற்றுப்படை சுட்டுகிறது.
உயர்ந்த அழகுமிகுந்த கொல்லி மலையை ஆட்சிப்புரிந்தவன் ஓரி என்பதை,
**“கொல்லி ஆண்ட வல் வில் ஓரியும்” (புறம். 158)**
புறநானூறு எடுத்துரைக்கிறது.

அவனுடைய ஊரைப்போலவும், மழைபோன்ற கொடைத்தன்மையையும், கள்ளுவையும் கொண்ட கொல்லி மலை ஓரியின் மலை ஆகும் என்பதை,
**“மாரி வண் மகிழ் ஓரி கொல்லிக்**
**கலி மயில் கலாவத்து அன்ன” (நற்றி. 265)**
நற்றிணை விளக்குகிறது.

**முடிவுரை**

கடையேழு வள்ளல்கள் பெருந்தன்மை கொண்டவர்களாக உள்ளனர். தம்மைத் தேடி வந்தவர்களுக்கு ‘இல்லை’ என்று சொல்லாமல் பொருள் வழங்க வேண்டும் என்ற நோக்கைக்கொண்டிருந்தனர். கலைஞர்களுக்கும் வள்ளல்களுக்கும் இடையே உள்ள உறவுநிலையையும், கடையேழு வள்ளல்களுக்கு நிகரான சிறுபாணாற்றுப்படை பாட்டுடைத் தலைவன் ஒய்மானாட்டு நல்லியக்கோடான் என்பதையும் இக்கட்டுரை பதிவாக்கியுள்ளது.